குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,ஓமலூர்.

எஸ்.டி.சி.77 /2021

2021-ம் ஆண்டு டிசம்பர் 29 புதன்கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகி 1-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. பாலசுப்பரமணி | வயது | : 48 |
| த/பெ | : சித்துராஜ் | தொழில்: வெல்டிங் | |
| ஊர் | : காடையாம்பட்டி | சமயம் | : இந்து |
| வட்டம் | : காடையாம்பட்டி | ஜாதி | : விஸ்வகர்மா |
| மாவட்டம் | : சேலம் | | |

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் சேலம் கலெக்டர் அலுவலகத்திற்கு பின்னால் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் படிக்க தெரியும். ஆங்கிலம் சிறிதளவு படிக்க தெரியும். நான் டிப்ளமோ இன்ஜீரிங்கு படித்துள்ளேன். நான் காடையாம்பட்டியில் வெல்டிங்கு பட்டறை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அதை கே.எஸ்.இன்ஜீரிங்கு ஒர்க்ஸ் என்ற பெயரில் நடத்தி வருகிறேன். அதற்கு ஜி.எஸ்.டி எண். வாங்கி தான் தொழில் செய்யவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஜி.எஸ்.டி எண். பெறவில்லை. எனது நிறுவனத்திற்கு லட்டர் பேடு வைத்திருக்கவில்லை. நான் கான்ட்ராக்டு வேலை மற்றும் லேபர் வேலை இரண்டும் எடுத்து செய்கிறேன். கான்ட்ராக்டு வேலை செய்வதற்கு முதலிலேயே கொட்டேசன் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். எதிரி ஸ்ரீ டிம்பர் மற்றும் பிளைவுட்ஸ் என்ற பெயரில் மரக்கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் ஆசாாி இனத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி குயவர் சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனக்கு ஒரு சகோதரர் இருந்தார் அவர் விபத்தில் இறந்து விட்டார் என்றால் சரிதான். எதிரியின் உடன் பிறந்தவர்கள் பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் பெற்றோர் தற்போது உயிருடன் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருந்து இறந்து விட்டார். தற்போது ஒரு மனைவி இருக்கிறார். எதிரிக்கும் அவரது முதல் மனைவிக்கும் ஒரு மகன் உள்ளார். எதிரிக்கும் தற்போது உள்ள மனைவிக்கும் 2 மகன்கள் உள்ளனர். நான் வருமான வரி செலுத்துவதில்லை. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் பிரமாணபத்திரிக்கையில் ரூபாய் 10 லட்சம் எவ்வாறு எனக்கு வந்தது என்ற விவரம் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்த புரோனோட்டில் கண்டுள்ள முகவரியை பார்த்து தான் எதிரியின் விலாசம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி கொடுத்ததாக கூறப்படும் புரோனோட்டின் நகலை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரிதான். மேற்படி புரோனோட்டின் ஒலி நகல் என்னிடம் இல்லை. மேற்படி புரோனோட்டினை செந்தில் எழுதினார். அதில் லட்சுமணன் மகன் சுந்தரம் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டார். மேற்படி புரோனோட்டை எழுதிய கண்ணன் மகன்

செந்தில் என்பவர் புரோனோட்டை எழுதி சாட்சி கையொப்பம் போட்டார். அதில் எதிரி கைரேகை வைத்தார்.புரோனோட்டை எதிரி தான் வாங்கி வந்தார். 13.11.2019ல் புரோனோட் எழுதப்பட்டது. 01.11.2019-ம் தேதி எதிரி என்னிடம் கடன் கேட்டார். பணத்தை வங்கியில் இருந்து நான் எடுக்கவில்லை. சேலம் ஜங்ஷனுக்கு அருகில் உள்ள எனது வீட்டை விற்க ஒரு ஒப்பந்தம் போட்ட வகையில் எனக்கு பணம் கேட்டது. மேற்படி ஒப்பந்தத்தை ரூபாய் 20 லட்சத்திற்கு போட்டேன். மேற்படி ஒப்பந்தத்தை தீவட்டிப்பட்டியை சேர்ந்த நாகராஜ் என்பவரிடம் போட்டேன். மேற்படி ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் ஆகும். மேற்படி ஒப்பந்தம் போட்ட வகையில் எனக்கு பணம் கிடைத்த விவரத்தை மேற்படி புகார், எனது வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண பத்திரிக்கையில் நான் கூறவில்லை. புரோனோட் தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் எதிரிக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். அ.த.சா.அ.3-ல் கண்டுள்ள சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். என் புகாரில் கண்டுள்ள சங்கதிகளையும் நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன். எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 251 -ன் படி கேட்கப்பட்ட கேள்விக்கு எதிரி கொடுத்த பதில் என்ன என்று எனக்கு தெரியாது. எனது பட்டறையில் வைத்து எதிரி காசோலை எனக்கு கொடுத்தார். எதிரி சுந்தரம் மற்றும் செந்தில் ஆகியோரை அழைத்து வந்தார். வழக்கு காசோலையை கொடுத்த போது தான் மேற்படி புரோனோட் எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கு காசோலையில் எதிரி நீலநிற மையில் கையொப்பம் செய்தார்.மேற்படி கையொப்பத்தை என் முன்னால் தான் எதிரி போட்டார். காசோலையில் கண்டுள்ள பிறசங்கதிகளை ஏற்கனவே நிரப்பி எதிரி கொண்டு வந்திருந்தார். அதில் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரி காசோலையில் தமிழில் தான் கையொப்பம் செய்துள்ளார். வழக்கு காசோலையில் For SREE TIMBER AND PLYWOODS Proprietor என்று கண்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் கண்டுள்ள கையொப்பமும், பிறசங்கதிகளும் வேறு வேறு மைகளினால் எழுதப்பட்டுள்ளன என்றால் சரிதான். ஒரு நாகராஜ் என்பவருடன் நான் போட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். 10.11.2019-ல் மேற்படி ஒப்பந்தத்தை நான் போட்டேன். மேற்படி ஒப்பந்தத்தின் அசல் நாகராஜிடம் உள்ளது. என்னிடம் ஒலி நகல் உள்ளது. எதிரி தவிர மேலும் இரண்டு நபர்களுக்கு நான் கடன் கொடுத்துள்ளேன். நான் வட்டி தொழில் செய்வதற்கு அரசாங்கத்திடம் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் கொடுத்த பணம் ரூ.100, ரூ.500, ரூ.2000 தாள்கள் அடங்கியது. நாகராஜ் எனக்கு கொடுத்த பணத்தை அப்படியே நான் எதிரிக்கு கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். நாகராஜ் வங்கியில் இருந்து பணம் எடுத்து எனக்கு கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி பணம் ரூ.100,ரூ.500, ரூ.2000 எத்தனை தாள்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போதும், மேலும் என்னுடைய சாட்சி விசாரணையின் போதும் நான் இரண்டு பிரமாண பத்திரிக்கைகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார் தாக்கல் செய்த போது நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் 3-வது பத்தியில் 19.07.2021 ஆம் தேதியிட்ட இந்தியன் வங்கி, தீவட்டிப்பட்டி கிளையின் காசோலை எண் 349926 யை எனக்கு தரவேண்டிய சட்டப்படியான கடனை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி எனக்கு வழங்கினார். என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசகங்கள் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னிடம்

01.11.2019 ல் என்னுடைய கடையில் வைத்து கடன் கேட்டார். எதிரி மட்டும் தான் என்னிடம் வந்து கடன் கேட்டார். ஒருவருக்கு கடன் கொடுப்பதற்கு முன்பு அவருக்கு என்ன வருமானம் உள்ளது. அவருடைய சொத்துகள் உள்ளது என்று விசாரித்து தான் கொடுப்பேன். எதிரிக்கு சொந்தமான வீடு கூட கிடையாது என்றால் சரிதான். எதிரி மரக்கடை வைத்து தான் குடும்பம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி மரக்கடை மூலமாக ரூ.10 லட்சத்தை திருப்பி தரும் அளவிற்கு எதிரிக்கு வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியின் மாத வருமானம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எதிரி மாதம் ரூ.10 லட்சம் முதல் 20 லட்சம் வருமானம் சம்பாதிக்கிறார். அவ்வாறு எதிரி சம்பாதிக்கும் பட்சத்தில் எதிரி என்னிடம் ரூ.10 லட்சம் கடன் கேட்கும் அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் சமயத்தில் ஒரு சுந்தரவடிவேல் மற்றும் ஒரு செந்தில் உடனிருந்தனர். எதிரிக்கு என் கடையில் வைத்து தான் கடன் கொடுத்தேன். நான் எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிரமாண பத்திரிக்கையில் எங்கு வைத்து எதிரி கடன் கேட்டார் எங்கு வைத்து எதிரிக்கு நான் கடன் கொடுத்தேன் காசோலை மற்றும் புரோனோட் ஆகியவற்றில் எதிரி எங்கு வைத்து கொடுத்தார் என்று குறிப்பிட்டு எந்த விவரமும் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் பணத்தை நான் மட்டும் தான் திருப்பி கேட்டேன். அச்சமயம் வேறு யாரும் உடன் இல்லை.வழக்கு காசோலை தவிர எதிரியின் காசோலைகளான ( 349927, 349928) ஆகியவைகள் என்னிடம் உள்ளனவா என்றால் இல்லை. எதிரி எனக்கு பல வருடங்களாக பழக்கம். மாதாந்திர ஏல சீட்டு என்ன என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு நான் கூறுவது பொய் என்றாலும், 2018-ம் வருடம் டிசம்பர் மாதம் நான் நடத்தி 25 மாத தவணைகள் கொண்ட 5 லட்ச ரூபாய் ஏல சீட்டு நான் நடத்தினேன் என்றாலும், அதில் எதிரி ஒரு உறுப்பினாராக சேர்ந்தார் என்றாலும் சரியல்ல. அதில் எதிரி மாதம் 25 ஆயிரம் கட்டி கலந்து கொண்டார் என்றால் சரியல்ல. அதில் 4-வது சீட்டை எதிரி எடுத்து கொண்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு ஏல சீட்டு நடத்தும் போது ஆதவிற்காக நான் காசோலையை வாங்கி வைத்து கொள்வது வழக்கம் என்றால் சரியல்ல. அவ்வாறு ஏல சீட்டு எடுத்த பொழுது (349927, 349928) எண்கள் கொண்ட காசோலைகள் மற்றும் வழக்கு காசோலையை எதிரி என்னிடம் ஒப்படைத்திருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி ஏல சீட்டு முடிந்த பின்னர் எதிரி மேற்படி காசோலைகளை என்னிடம் கேட்டார் என்றாலும், நான் அவற்றை தவறுதலாக வைத்து விட்டு தேடி எடுத்து தருகிறேன் என்று கூறினேன் என்றாலும், நட்பு ரீதியாக எதிரி அவற்றை வலியுறுத்தவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் காசோலையில் கண்டுள்ள SREE TIMBER AND PLYWOODS என்ற முகவரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான் இதன் காரணமாகவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூ.10 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு எந்த விதமான ஆதாரம் இல்லை என்றாலும், எனவே தான் எந்த ஒரு ஆதார ஆவணங்களும் என் வசதியை நிரூபிக்க நீதிமன்றத்தில் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு ஏல சீட்டு எடுத்த போது ஆதரவிற்காக கொடுத்த காசோலையை துர்லாபம் அடையும் நோக்கில் இவ்வழக்கில் நான் பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி அவ்வாறு கொடுத்த காசோலையையும், தனது நிறுவனத்தின் காசோலையை தான் கொடுத்துள்ளார் என்றாலும்,

நான் மேற்படி காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி காசோலை மோசடி எதுவும் செய்யவில்லை என்றாலும், நான் தான் காசோலை மோசடி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனவே எதிரி இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யவேண்டியவர் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மறு விசாரணை. இல்லை.

ஒம்/ சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.